# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:........................................................... நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 216 ☐ ஆ) 30 ☐

இ) 18 ☐ ஈ) 247 ☐

2. கோ என்ற எழுத்து

அ) உயிர் எழுத்து ☐ ஆ) மெய் எழுத்து ☐

இ) உயிர்மெய் எழுத்து ☐ ஈ) ஆய்த எழுத்து ☐

3. கதிரவனுக்கு நன்றி செலுத்தும் நாள்

அ) மாட்டுப் பொங்கல் ☐ ஆ) ஆடிப்பிறப்பு ☐

இ) உழவர் திருநாள் ☐ ஈ) பட்டிப்பொங்கல் ☐

4. வள்ளல் என்பதன் பொருள்

அ) போராளி ☐ ஆ) கொடையாளி ☐

இ) முதலாளி ☐ ஈ) தொழிலாளி ☐

5. மரம் என்பது

அ) படர்க்கை ☐ ஆ) முன்னிலை ☐

இ) தன்மை ☐ ஈ) பன்மை ☐

6. போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட ஆண்டு

அ) 1619 ☐ ஆ) 1719 ☐

இ) 1833 ☐ ஈ) 1811 ☐

7. பாடுகின்றாள் என்ற வினைச்சொல்லின் இறந்தகாலம்

அ) பாடுவாள் ☐ ஆ) பாடினாள் ☐

இ) பாடுவர் ☐ ஈ) பாடினர் ☐

8. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொல்

அ) உவகை ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) களிப்பு ☐ ஈ ) இடர் ☐

9. பறவைகள் வானில் நிரைநிரையாகப் பறந்தன. இச்சொல்லியத்தின் எழுவாய்

அ) வானில் ☐ ஆ) பறவைகள் ☐

இ) பறந்தன ☐ ஈ) நிரைநிரையாக ☐

10. ஏழு வெந்நீர்க் கிணறுகள் அமைந்துள்ள இடம்

அ) கன்னியாய் ☐ ஆ) மன்னார் ☐

இ) நிலாவெளி ☐ ஈ) வாழைச்சேனை ☐

11. விளையாட்டுத் திடலில் வீரர்கள் ______________ நின்றனர்.

அ) அணிஅணியாக ☐ ஆ) கலகலவென ☐

இ) கணீர்கணீரென ☐ ஈ) தப்பித்தவறி ☐

12. "பகைவர் கைப்பட்டு மானம் இழந்து இரந்துண்ணும் நிலை வந்ததே" என வருந்தியவன்.

அ) குமணன் ☐ ஆ) இரும்பொறை ☐

இ) செங்கணான் ☐ ஈ) இளங்குமரன் ☐

13. **பழமொழி:** அரசன் இல்லாத நாடு அச்சில்லாத

அ) தேர் ☐ ஆ) சில்லு ☐

இ) வண்டி ☐ ஈ) பல்லக்கு ☐

14. குமணன் ஆண்ட மலைப்பகுதி

அ) பறம்பு ☐ ஆ) முதிரை ☐

இ) இமயம் ☐ ஈ) குறிஞ்சி ☐

15. சுட்டாலும் வெண்மை தருவது

அ) சங்கு ☐ ஆ) நுங்கு ☐

இ) கிழங்கு ☐ ஈ ) பாக்கு ☐

16. ங்ஞ்ண்ந்ம்ன் என்ற எழுத்துகள்

அ) வல்லினம் ☐ ஆ) மெல்லினம் ☐

இ) இடையினம் ☐ ஈ ) உயிரினம் ☐

17. இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றியவர்கள்

அ) போர்த்துக்கேயர் ☐ ஆ) ஒல்லாந்தர் ☐

இ) ஆங்கிலேயர் ☐ ஈ ) இந்தியர் ☐

18. நீங்கள் + ஐ =

அ) உன்னை ☐ ஆ) நீங்களை ☐

இ) உங்களை ☐ ஈ) எங்களை ☐

19. வடதமிழீழத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் ஒன்று

அ) கீரிமலை ☐ ஆ) கொக்குவில் ☐

இ) இணுவில் ☐ ஈ) சுதுமலை ☐

20. நாகபூசனி அம்மன் கோவில் அமைந்துள்ள இடம்

அ) நெடுந்தீவு ☐ ஆ) நயினாதீவு ☐

இ) காரைதீவு ☐ ஈ) புங்குடுதீவு ☐

21. தமிழ் மன்னர்களான சேனனும் குத்திகனும் இலங்கையை ஆண்டது

அ) 24 ஆண்டுகள் ☐ ஆ) 26 ஆண்டுகள் ☐

இ) 22 ஆண்டுகள் ☐ ஈ) 25 ஆண்டுகள் ☐

22. சித்தார்த்தர் என்ற இயற்பெயரைக் கொண்டவர்

அ) புத்தர் ☐ ஆ) துட்டகெமுனு ☐

இ) எல்லாளன் ☐ ஈ) அசேலன் ☐

23. “பட்டி பெருக வேணும் தம்பிரானே” எனும் பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ☐ ஆ) மீன்பிடிப்பாடல் ☐

இ) ஏர்ப்பாடல் ☐ ஈ) காதற்பாடல் ☐

24. மாணவன் பள்ளிக்கு விரைந்து சென்றான். இச்சொல்லியத்தில் இடம்பெறாத சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) அடைமொழி ☐ ஈ) செயப்படுபொருள் ☐

25. இலக்கணத்தில் காலங்கள் ______________ வகைப்படும்.

அ) மூன்று ☐ ஆ) ஐந்து ☐

இ) ஆறு ☐ ஈ ) ஏழு ☐

26. இலங்கையிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களில் ஒன்று

அ) முன்னீச்சுரம் ☐ ஆ) இராமேச்சுரம் ☐

இ) திருகோணேச்சுரம் ☐ ஈ ) தம்பலேச்சுரம் ☐

27. சுற்றம் என்பதன் பொருள்

அ) பகைவர் ☐ ஆ) உறவினர் ☐

இ) தீயவர் ☐ ஈ ) கெட்டவர் ☐

28. பற்பசை என்பதைப் பிரித்தால்

அ) பல் + பசை ☐ ஆ) பற் + பசை ☐

இ) பல்ப் + பசை ☐ ஈ ) பற்ப் + பசை ☐

29. வேளாண்மை என்பது

அ) உழவுத் தொழில் ☐ ஆ) மீன்பிடித்தொழில் ☐

இ) கடற்றொழில் ☐ ஈ ) கைத்தொழில் ☐

30. ஆதிகால மக்கள் வாழ்ந்தது

அ) குகைகளில் ☐ ஆ) நகரங்களில் ☐

இ) வீடுகளில் ☐ ஈ ) குடிசைகளில் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கண்மணி நன்றாக ஓவியம் வரைவாள். ஆனால், அவள் யாரிடமும் அதனைக் கூறுவதில்லை. அதற்கு அவளிடமுள்ள தயக்க உணர்வுதான் காரணம். மாவீரர்நாளை முன்னிட்டுப் பள்ளியில் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள் ஓவியப்போட்டியும் ஒன்று. போட்டியில் கலந்துகொள்ளப் பலரும் ஆர்வத்துடன் பெயர்களைக் கொடுத்தனர். கண்மணியும் கலந்து கொள்ள விரும்பினாலும் சிறப்பாக வரையமுடியுமா எனத்தயங்கினாள். கண்மணியின் தயக்கத்திற்குக் காரணம் அவள் தன் திறமையைப்பற்றி அறியாததே. இந்நிலையில் அவளது ஆசிரியர் அவளது திறமையை எடுத்துக் கூறினார். நீ உன்னிடமுள்ள திறமைகளை வாய்ப்புக்கிடைக்கும்போது வெளிப்படுத்துதல் வேண்டும். நல்ல வாய்ப்புகளை என்றுமே நழுவவிடுதல் கூடாது. அதுவே எம்திறமையைக் காட்ட ஒரு களமாக அமையும் என்றார். கண்மணியும் மகிழ்ச்சியோடு ஓவியப்போட்டியில் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றாள்.

1. எந்நாளை முன்னிட்டுப் பள்ளியில் போட்டிகள் அறிவிக்கப்பட்டன?

   ________________________________________

2. நன்றாக ஓவியம் வரைபவரின் பெயர் என்ன?

   ________________________________________

3. எதை என்றுமே நழுவவிடுதல் கூடாது?

   ________________________________________

4. கண்மணியைப் போட்டியில் பங்குபற்றுமாறு கூறியவர் யார்?

   ________________________________________

   ________________________________________

5. கண்மணி ஓவியப்போட்டியில் எத்தனையாம் இடத்தைப் பெற்றாள்?

   ________________________________________

   ________________________________________

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு எது?

______________________________

______________________________

2. "பௌத்த நெறியை மீட்பதற்கான போர்" என்ற முழக்கத்தை முன் வைத்தோர் யாவர்?

______________________________

______________________________

3. எழுத்தில் இடம் பெறாது செவிவழியாகத் தலைமுறை தலைமுறையாகப் பேணப்படும் பாடலை எவ்வாறு அழைப்பர்?

______________________________

4. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தமிழ் மன்னன் யார்?

______________________________

5. யாழ் முத்திரைச் சந்தி என்னும் இடத்தில் யாருடைய சிலை அமைந்துள்ளது?

______________________________

6. **குறள்:** வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி
இக்குறளின் பொருளைத் தருக.

______________________________

______________________________

7. "தரையில் வந்து வீழுவாய்; தவிடு பொடி ஆகுவாய்!
மறந்திடாதே!" இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## வானொலி

| | | |
|---|---|---|
| வானொலி | செய்திடும் | கதையும் |
| எங்கள் | கேட்கும் | |

*வீட்டில் இருக்கும் வானொலி*

*விரும்பிக் ______________ வானொலி*

*பாட்டும் ______________ சொல்லிடும்*

*பொழுதைப் போக்க உதவிடும்*

*பாலர் ______________ திறமையைப்*

*பலரும் கேட்கச் ______________*

*நேயர் விரும்பும் நிகழ்ச்சிகள்*

*நாளும் கொடுக்கும் ______________*

*தாயகத்துச் செய்திகள் - அனைத்தும்*

*தந்தே உதவும் வானொலி!*

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் நிரற்கூட்டை நிறைவு செய்க.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | ஓடுகின்றது | |
| நடந்தாள் | | |
| | | உண்பான் |

2. பின்வரும் பெயர்ச்சொற்களின் வகைகளைத் தருக.

மாதம் ____________ நூல் ____________

சிரித்தல் ____________ இலை ____________

மருத்துவமனை ____________ நீலம் ____________

3. அ. முதலெழுத்துகள் எத்தனை? ____________

அவற்றின் வகைகளைத் தருக?

____________ ____________

4. எடுத்துக்காட்டுகள் தருக.

அஃறிணை ____________

உயர்திணை ____________

ஒன்றன்பால் ____________

பலர்பால் ____________

முன்னிலைப் பெயர் ____________

தன்மைப் பெயர் ____________

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

மீனவன் ______________________________

______________________________

தமிழீழம் ______________________________

______________________________

விண்ணுந்து ______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

எனது பெற்றோர் காலையில் வேலைக்குச் செல்கின்றனர். அவர்கள் மாலையில் வீட்டிற்கு வருவதைக் கண்டதும் நான் மகிழ்வேன். அம்மாவும் அப்பாவும் வீட்டிற்கு வந்ததும் என்னைப் பூங்காவிற்கு விளையாட அழைத்துச் செல்வர். நாங்கள் வீட்டிற்கு வந்தவுடன் முகம், கை, கால் கழுவுவோம். பின்னர் நான் வீட்டுப்பாடம் செய்வேன். அதன் பின்பு எல்லோரும் ஒன்றாக இரவு உணவு உண்போம். உறங்கச் செல்லும்போது அம்மா எனக்குக் கதை கூறுவார். என் பெற்றோரை எனக்கு மிகவும் பிடிக்கும்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✲. **தமிழீழநாடும் விடுதலைப்போராட்டமும்**

✲. **நாட்டுப்புறப் பாடல்கள்**

✲. **அங்காடி**

- *அங்காடி நடைபெறும் காலங்களும் நேரங்களும்*
- *விற்கப்படும் பொருட்கள்.*
- *அங்காடியினால் ஏற்படும் நன்மைகள்.*

| புள்ளிகள் 20 |
|---|